# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

****************

**முறையீட்டு மனு எண்: 129/2017/பே.2**

**ஆணை எண். 58 / நாள்.20–03–2018.**

**திரு டி.எம். கல்யாணசுந்தரம்,**
**சமூக ஆர்வலர்,**
**7–1–12, கமலா நேரு தெரு,**
**பழனிசெட்டிபட்டி – 625531,**
**தேனி மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்**

**செயல் அலுவலர்**
**பண்ணைக்காடு பேரூராட்சி,**
**திண்டுக்கல் மாவட்டம்.** — **எதிர் மனுதாரர்**

**ஆணை**

தேனி மாவட்டம், பழனிசெட்டிபட்டி, 7–1–12 கமலாநேரு தெருவினை சேர்ந்த திரு T.M. கல்யாணசுந்தரம், முறையீட்டு மனுதாரரின் 0706.2017ம் நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 09.06.2017ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 129/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

முறையீட்டு மனுதாரர் தனது புகார் மனுவில், திண்டுக்கல் மாவட்டம், பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் மீது பல்வேறு புகார்கள் தெரிவித்து விசாரணை கோரி தனது புகார் மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 16.06.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட புகார் மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடிதத ந.க.எண். 70/2017/நாள் 29.06.2017ன்படி மேற்கண்ட புகார் மனுவிற்கான அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம், பண்ணைக்காடு பேரூராட்சியில் உள்ள பழைய பொருட்கள் 12.01.2017ம் தேதியில் பொது ஏலம் விடப்பட்டதாகவும், இந்த பொது ஏலத்தில் தேனியை சேர்ந்த திரு T.M. கல்யாணசுந்தரம் என்பவர் கலந்து கொண்டு பழைய பொருட்களை உயர்ந்த கேள்விக்கு ரூ. 24,062/–க்கு ஏலம் எடுத்துள்ளதாக தெரிவித்துள்ளார். ஏலம் எடுத்து உரிய தொகையினை வங்கி செலான் மூலம் பேரூராட்சி கணக்கில் செலுத்தி இரசீதும்

பெற்றுக் கொண்டதாகவும், ஏலம் எடுத்து மூன்று தினங்கள் கழித்து தான் எடுத்த ஏலத்தினால் தனக்கு ரூ 10,000/- நஷ்டம் ஏற்பட்டதாகக் கூறி செயல் அலுவலரிடம் பணம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் தொடர்ச்சியாக வீண் பழி சுமத்துவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நபரே ஏலத்தில் கலந்து கொண்டு உயர்ந்த கேள்விக்கு ஏலம் எடுத்த பின்னரும், பெண் செயல் அலுவலர் என்ற காரணத்தினால் வீண் புகார் அளித்தும் அடுத்த நபர்களை வைத்து தொலைபேசியில் மிரட்டுவதும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத்துறை உயர் அதிகாரிகளுக்கும் புகார் தெரிவிப்பது போன்ற செயல்களின் மூலம் எப்படியாவது பணம் பெற்றுக் கொள்ளலாம் என்ற ஒரே நோக்கத்துடன் செயல்பட்டு வருவதாகவும், தன்னுடைய அறிக்கையில் பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதுடன் ஏலம் நடைபெற்றமைக்கான ஏலப்பதிவேடு நகல் மற்றும் ஏல நோட்டீஸ் ஆகியவற்றின் நகல்களை இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.08.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரர் மற்றும் செயல் அலுவலர், பண்ணைக்காடு ஆகியோர்களின் நேரடி விளக்கத்தினை பெறும் பொருட்டு இம்முறைமன்ற நடுவத்தில் 24.10.2017ல் ஆஜராக ஆணையிடப்பட்டது.

24.10.2017 அன்று திண்டுக்கல் மாவட்டம், பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி தனது விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் கடந்த இரண்டு ஆண்டு காலமாக பண்ணைக்காடு பேரூராட்சியில் செயல் அலுவலராக இருப்பதாகவும், மனுதாரர் திரு கல்யாணசுந்தரம் தான் குடியிருக்கும் தேனியில் பக்கத்து விட்டுக்காரர் எனவும் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மனுதாரர் பழைய இரும்பு வியாபாரம் செய்வதாகவும், தான் பணிபுரியும் பண்ணைக்காடு பேரூராட்சியில் பழைய இரும்பு சாமான்கள் எல்லாம் ஏலம் விடும்போது ஏலம் எடுத்தார் எனவும் தெரிவித்துள்ளார். பின்பு ஒரு நாள் தனது வீட்டிற்கு வந்து தனக்கு நஷ்டம் ஆகி விட்டது. எனவும் ரூ 10,000/- தரவேண்டும் என கேட்டதாகவும், தான் பணம் தர முடியாது என தெரிவித்து ரூ 1,000/- மதிப்பிற்கு தன்னுடைய வீட்டில் இருந்த பழைய சாமான்கள் எல்லாம் கொடுத்ததாக பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தொடர்ந்து ரூ 10000/- கேட்டுக் கொண்டிருந்ததாகவும், தான் மறுக்கவே தன்னை என்ன செய்கிறேன் பார் என்று உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கும் மனு அனுப்பியுள்ளார் எனவும், ஒரு முறை அமைச்சர் அலுவலகத்தில் இருந்து பேசுவதாக ஒரு ஆள் வைத்து பேசி தன்னை மிரட்டியதாகவும் மற்றபடி மேற்படி புகார் மனுவில் எந்தவிதமான உண்மையும் இல்லை எனவும் பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

24.10.2017ம் நாளைய விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் ஆஜராகாததோடல்லாமல் அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 27.11.2017ம் நாளிட்ட அறிவிப்பாணயில் மேற்படி முறையீட்டு மனுதாரர் 24.10.2017ம் நாளன்றைய விசாரணையில் கலந்து கொள்ளாததையும், தனது முறையீட்டு மனுவில் பண்ணைக்காடு பேரூராட்சி ஏலத்தில் கலந்து கொண்டதை மறைத்ததை சுட்டிக்காட்டியும் தனது முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களுக்கான ஆதார ஆவணங்கள், சாட்சிகள் இருப்பின் அவர்களின் விவரம் ஆகியவற்றினை ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்க முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

முறையீட்டு மனுதாரர் திரு T.M. கல்யாணசுந்தரம் தனது 09.12.2017ம் நாளிட்ட கடிதத்தில் தான் தனது புகார் மனுவில் தெரிவித்துள்ள புகார்கள் அனைத்தும் உண்மை எனவும் தான் மேற்படி பேரூராட்சியில் ஏலம் எடுத்ததையும் ஒப்புக் கொண்டு தனக்கு மேற்படி விசாரணைக்கான அழைப்பாணை கிடைக்கப்பெறவில்லை எனவும் தெரிவத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 15.12.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுதாரருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 13.03.2018 அன்று நேரில் ஆஜராகி தனது முறையீடு குறித்தான விளக்கத்தினை பதிவு செய்ய ஆணையிடப்பட்டது. ஆனால் இம்முறையும் முறையீட்டு மனுதாரர் நேரடி விசாரணைக்கு ஆஜராகவுமில்லை அதற்கான எந்த விளக்கத்தினையும் சமர்ப்பிக்கவில்லை.

இந்நிலையில் மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது 07.06.2017ம் நாளிட்ட புகார் மனுவில் தான் பண்ணைக்காடு பேரூராட்சி அலுவலகத்தில் ஏலம் எடுத்த விவரத்தினை மறைத்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளதோடு இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணைக்கு பின்னரே அதனை ஏற்றுக் கொண்டுள்ளார். மேலும் பண்ணைக்காடு பேரூராட்சி செயல் அலுவலர் மீது தெரிவித்துள்ள புகார்கள் குறித்தான ஆதார / ஆவணங்கள் மற்றும் சாட்சிகள் ஏதேனும் இருப்பின் அதன் விவரத்தினை தெரிவிக்கக் கோரியும் இதுவரை எந்தவிதமான ஆதார ஆவணங்களையோ, சாட்சிகளின் விவரங்களையோ சமர்ப்பிக்கவில்லை. இருப்பினும் அவருக்கு மீண்டும் வாய்ப்பளித்து 13.03.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தினை பதிவு செய்ய ஆணையிடப்பட்டும் அதனையும் மேற்படி முறையீட்டு மனுதாரர் பயன்படுத்தத் தவறியுள்ளார். எனவே மேற்படி முறையீட்டு மனுதாரர் தனது மூறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள புகார்களுக்கான ஆதார/ஆவணங்களையும், சாட்சிகளையும் சமர்ப்பிக்கத் தவறியதோடல்லாமல், இம்முறைமன்ற நடுவ விசாரணையிலும் கலந்து கொள்ளத் தவறியுள்ளார். எனவே இவரின் புகார் மனு ஆதாரமற்றது எனக் கருதி தள்ளுபடி செய்து ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 20-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–**

டி. பழனிவேல்

**செயலாளருக்காக.**

பெறுநர்:

1.திரு டி.எம். கல்யாணசுந்தரம்,
சமூக ஆர்வலர்,
7–1–12, கமலா நேரு தெரு,
பழனிசெட்டிபட்டி – 625531,
தேனி மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
பண்ணைக்காடு பேரூராட்சி,
திண்டுக்கல் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
திண்டுக்கால்.